த.வெ.க.வின் வெற்றி - தோல்விக்குச் சமமானதே! தி.மு.க.வின் வாக்கு வங்கியை அசைக்க முடியவில்லை!

கட்சி மாறி நின்று வெற்றி பெற்றது ஜனநாயகத்துக்குப் பெரும் தலைக்குனிவே!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, அக்.12-

ஆறு மாதத்திற்குள் திணிக்கப்பட்ட தேர்தல்களான மதுராந்தகம், தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தல்கள் நடைபெற்று, (9.10.2026) அன்று முடிவுகள் வந்ததில், ஆளும் கட்சி தனது கைவசம் உள்ள ஆட்சி பலம், பதவி பலம், பண பலம், பத்திரிகை பலம் போன்ற பலங்களைப் பயன்படுத்தி, அந்த இரண்டு தொகுதிகளிலும் பெற்ற வெற்றிதான், அந்த இரண்டுத் தேர்தல் களின் முடிவுகள் என்பது உலகறிந்த ரகசியம்!

இரு தொகுதிகளில் த.வெ.க. வின் வெற்றி – ஜனநாயகத்திற்கும், நியாயத்திற்கும் கிடைத்த ஒன்றா?

இதில் ஒரு விசித்திரம் என்னவென்றால், 5 மாதங்களுக்கு முன்பு தமிழ் நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலில் நின்று வென்ற இரு பெண்கள் பதவி விலகி ஆளுங்கட்சியில் சேர்ந்தது தான்.

ஆளுங்கட்சியில் அவர்கள் இணைந்தது, அக்கட்சியின் கொள்கைக்காகவா? அல்லது ஆளுங்கட்சியாகி உள்ள அக்கட்சியிடம் அமைச்சர் பதவிக்கோ, அதை ஒத்த வேறு லாபங்களைப் பெறுவதற்காகவும்தான் என்பது அனைவரும் அறிந்ததே!

இந்த வெற்றி ஜனநாயகத்திற்குக் கிடைத்த பெருமைக்குரிய அல்லது நியாயத்தின்பாற்பட்ட வெற்றியா?

மனசாட்சியுள்ளவர்கள் அப்படிக் கூற முடியுமா?

ஆளுங்கட்சி நாற்காலி முக்காலியாக இருப்பதை மாற்றி, முட்டுக் கொடுக்கத் தேவையான எண்ணிக்கை தேவை; இரவல் கால்தான் நாலாவது கால். அவற்றில் ஆடுவதும், ஆட்டப்படுகிறதோ என்ற அச்சத்தோடு நாளும் இருப்பதற்கு, மேலும் சில எம்.எல்.ஏ.க்கள் தேவை என்பது ஆளுங்கட்சிக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி.

தி.மு.க. கூட்டணியில் நின்று வெற்றி பெற்ற சில கட்சிகள் அணி மாறி ஆதரித்தது சரியா?

தி.மு.க. கூட்டணியில் நின்று, வென்று முதலமைச்சர் ஆன ஜோசப் விஜய் அவர்கள் ஆட்சிக்கு ஆதரவு தரும் காங்கிரஸ், இடதுசாரிகள், வி.சி.க., முஸ்லிம் லீக் கட்சிகளை இணைத்து, சிலருக்குப் பதவிகள் தந்தது ஆரோக்கியமா?

அதற்காக, 2 தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் என்ன செய்தாவது,



எப்படியாவது வெற்றியைப் பெற்றாக வேண்டிய நிர்ப்பந்தத்தால், மதுராந்தகம் தொகுதியில், எல்லா எல்லைகளுக்கும் சென்றனர்.

'அரசியலில் ஜாதி பார்க்கமாட்டோம்' என்று சொன்னது கடைப்பிடிக்கப்பட்டுள்ளதா?

எல்லாவற்றையும்விட முதலமைச்சரின் இரண்டு தொகுதிகளின் 'ரோட் ஷோ'விலிருந்து, முருங்கைக்காய் பறித்தது போல, வெற்றியையும் பறித்துவிட்டனர்.

தி.மு.க.வின் வாக்கு வங்கியை அசைக்க முடியவில்லை!

எதிர்க்கட்சியாக அமர்ந்துள்ள தி.மு.க.வின் வாக்கு வாங்கியை அவர்கள் அசைக்க முடிய வில்லை.

எப்படியோ வெற்றி பெற்று விட்டனர்.

இப்படிப் பெற்ற "வெற்றிக்கு" ஆங்கிலத்தில் ஓர் அருமையான சொற்றொடர்மூலம் என்ன பெயர் தந்திருக்கிறார்கள் தெரியுமா?

'Pyrrhic Victory' அதற்கு அகராதி தரும் பொருள் என்ன? தெரிந்துகொள்ளுங்கள்!

'A Victory as bad as defeat' தோல்விக்குச் சமமான மோசமான வெற்றி!

அதேநேரத்தில், எதிர்க்கட்சிப் பொறுப்பேற்றுள்ள தி.மு.க. மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளில் கொள்கை பலத்தால் மக்களிடையே நேரிடை வழியில், கடந்த கால 'திராவிட மாடல்' ஆட்சியின் சாதனைகளைக் கூறி, இப்போது 5 மாதம் ஆட்சியில், சட்டம் - ஒழுங்குச் சீர்குலைவு, அரிவாள் வெட்டு, மின்வெட்டு, ஆளுங்கட்சியினர் மீதே உயர்நீதி மன்றம் உள்படப் பலரும் சுட்டிக்காட்டிய ஊழல் குற்றச்சாட்டுகள் முதலியவை குறித்து முறையான கேள்வி கேட்டும், ஓர் எதிர்க்கட்சியின் பங்களிப்பைச் செய்தும், நடைபெற்ற இடைத் தேர்தல்களில் இரண்டாம் இடத்திற்கு முன்னேறி, கணிசமான வாக்குகளைப் பெற்றிருக்கிறது.

முதலமைச்சரோ, ஆளுங்கட்சியினரோ, தேர்தல் பிரச்சாரத்தின்போது, எவற்றுக்கும் பதிலளிக்காமல், திசை திருப்பினார்கள். அது எடுபடவே இல்லை என்பதை வாக்காளர்கள், ஆளுங்கட்சியினருக்குப் புரிய வைத்துவிட்டார்கள்.

எனவே, இரண்டு தொகுதிகளிலும் ஆளுங்கட்சியின் வெற்றி என்பது, 'பெறப்பட்ட வெற்றி' என்பதைவிட, 'வாங்கப்பட்ட' அல்லது வித்தைக் காட்சிகளினால் 'பறிக்கப்பட்ட' வெற்றியாகும்!

தி.மு.க. எதிர்க்கட்சியாக அதன் பணிகளைச் செம்மாந்து செய்ய உத்தரவிட்டுள்ளனர் இரு தொகுதிகளின் வாக்காளர்களும்!

அதுகூட 'திராவிட மாடல்' ஆட்சியின் சாதனைகள் மீது ஏறி நின்றுதான் ஆளுங்கட்சியால் பறிக்கப்பட்ட வெற்றி; முருங்கைக்காய் பறிக்க உதவிய சொரட்டு போல, எது உதவியது என்பது ஒருபுறம் இருக்கட்டும்.

ஜனநாயகம் துகில் உரிக்கப்பட்ட நிலை அல்லவா!

இரு இடைத்தேர்தல்களில் ஆளுங்கட்சி பெற்ற வெற்றி என்பதை நேர்மையாக மதிப்பிட்டால், 'காட்சிச் சாதனை'களால் பெற்ற 'ஆக்கிரமிப்பு வெற்றியே!' தவிர, 5 மாத ஆட்சிச் சாதனைகளால் மக்கள் வழங்கியத் தீர்ப்பின் மூலம் கிட்டிய வெற்றி ஆகாது!

'ஆபரேஷன் வெற்றி – நோயாளி சாவு!'

ஒரு பழமொழிதான் நினைவிற்கு வருகிறது; ஆளுங்கட்சிக்குத் "தேர்தல் என்றால், 'ஆபரேஷன்' வெற்றி; அதேநேரம் 'ஜனநாயகம்' என்ற 5 மாத நோயாளி செத்தார்" என்பதே பொருத்தம்!

ஜனநாயகக் கொள்கையைச் சிதைத்து, கட்சி தாவியவர்கள் மீண்டும் வெற்றி பெற இப்படிப் பல வழிகளில், ஜனநாயகப் பொது ஒழுக்கத்திற்கும், ஜனநாயகத்தின் உண்மை தத்துவத்திற்கும் பங்கமும், பாதகமும் செய்தது, வரலாற்றில் பெரும் கறையே! இதனை வரலாறு என்றும் மறைக்காது, மறக்காது.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

புதுடெல்லியில்

எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக போராட்டம்; சென்னையில் பாயாசமா..?

தி.மு.க. ஐ.டி.விங் சரமாரி கேள்வி!

சென்னை, அக். 12 -

டெல்லியில் எஸ்ஐஆர்க்கு எதிராக போராட்டம் சென்னையில் பாயாசமா என்று தி.மு.க. ஐ.டி. விங் சரமாரி கேள்வி எழுப்பியுள்ளது.

தி.மு.க. ஐ.டி.விங் தனது சமூக வலைத்தள பதிவில் கூறியிருப்பதாவது:

டெல்லியில் எஸ்ஐஆர்க்கு எதிராகப் போராட்டம். சென்னையில் பாயாசமா? நேற்று, நேற்று முன்தினம் டெல்லியில் போராடிவிட்டு எஸ்ஐஆர்க்கு எதிராக போராடும் சென்னை இளைஞர்களை ஒடுக்கும் விஜய்யுடன் கிடாவிருந்து. இது தான் காங்கிரஸ் டி.வி.கே. - இணைந்து கிண்டும் பாயாசமா?. எஸ்ஐஆர்க்குப் பிறகு நடந்த எல்லா தேர்தல்களும் செல்லாது என்றும் அந்த மாநிலங்களில் மீண்டும் தேர்தல் நடத்த வேண்டும் என்றும் காங்கிரஸ் தலைவர் கார்கே கூறி வருகிறார்.

ஆனால் எஸ்ஐஆர்க்கு எதிராக போராடும் ராகுல் காந்தி, தாங்கள் தோற்ற தேர்தல்களில் மட்டும் எஸ்.ஐ.ஆர். மீது சந்தேகம் எழுப்பியும் கேரளா, தமிழ்நாடு தேர்தல்களை மட்டும் புனிதப்படுத்தும் இரட்டை நிலைப்பாட்டுக்கான விளக்கத்தை தருவாரா? தமிழ்நாடு 2026 தேர்தல் பற்றி ஏன் மவுனம் சாதிக்கிறார்? ஒரே எஸ்.ஐ.ஆர். ஒரே தேர்தல் ஆணையம். ஆனால் மாநிலத்துக்கு மாநிலம் வேறு நிலைப்பாடா?. எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக சென்னையில் மாணவர்களிடையே ராகுல்காந்தி பேசப் போகிறாராம். அதே எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக போராடும் இளைஞர்களை அவரது கூட்டாளி விஜய் (நேற்று) கைது செய்துள்ளார்.

டெல்லியில் மோடிக்கு எதிராக போராட்டம். சென்னையில் குட்டி 'ஜி' உடன் விருந்து. இது என்ன விதமான அரசியல்?. பா.ஜ.வுக்கு எதிராக உண்மையாகவே போராடும் இளைஞர்களுக்கு எந்தவிதமான கிரெடிட் போய்விடக் கூடாது என்று பா.ஜ.வு.க்கு மறைமுக ஆதரவாக செயல்படும் கள்ளக் கூட்டணி அரசியல்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மதுராந்தகம் தொகுதி வாக்காளர்களுக்கு மனமார்ந்த நன்றி!

தி.மு.க. என்றும் வலிமையானது என்பதை உணர்த்தியுள்ள இடைத்தேர்தல்!

கழக வேட்பாளர் இ.பரந்தாமன் அறிக்கை!

சென்னை, அக்.12-

மதுராந்தகம் தொகுதி கழக வேட்பாளராகப் போட்டியிட்ட வழக்கறிஞர் இ. பரந்தாமன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

குதிரை பேர த.வெ.க. அரசால் மக்கள் மீது திணிக்கப்பட்ட இடைத்தேர்தலில் மதுராந்தகம் தொகுதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராகப் போட்டியிட்ட எனக்கு 54 ஆயிரம் வாக்குகளை அளித்த மதுராந்தகம் வாக்காளர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



தேர்தல் களத்தில் வெற்றியும் தோல்வியும் இயல்பானவை. அதுவும், திணிக்கப்பட்ட இடைத்தேர்தல் களத்தில், ஆளுங்கட்சியினரின் அனைத்து வகை அத்து மீறல்களையும், அதிகாரபலத்தையும், முதலமைச்சர் விஜய் தெருத் தெருவாக வலம் வந்ததையும் மீறி, தி.மு.க. என்ற பேரியக்கத்தின் மீது நம்பிக்கை வைத்து உதயசூரியனுக்கு அளிக்கப்பட்டுள்ள வாக்குகள், தி.மு.க. என்றும் வலிமையானது என்பதை உணர்த்துகின்றன.

பொதுத் தேர்தலில் பெற்ற மூன்றாம் இடத்திலிருந்து, இடைத்தேர்தலில் இரண்டாம் இடத்திற்கு முன்னேறி வந்திருப்பதன் மூலம், தமிழ் நாட்டு மக்களின் உள்ளங்களிலிருந்து கழகத்தை எவராலும் பிரிக்க முடியாது என்பது உறுதியாகியுள்ளது.

மதுராந்தகத்தில் கழக வேட்பாளராகப் போட்டியிடும் வாய்ப்பினை எனக்கு வழங்கிய கழகத் தலைவர்திராவிட நாயகர் அவர்களுக்கும், வழிநடத்திய கழகத்தின் இளம்தலைவர் சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் களத்தில் கழகத் திற்காகப் பரப்புரையாற்றிய கழகதுணைப் பொதுச் செயலாளர் அக்கா கனிமொழி எம்.பி. அவர்கள் மற்றும் தோழமைக் கட்சித் தலைவர்கள், தேர்தல் பணியினை ஒருங்கிணைத்துப்பணியாற்றிய திமுக சட்டமன்றக் கட்சி கொறடா அண்ணன் எ.வ.வேலு, தேர்தல் பொறுப்பாளர்கள் அண்ணன் த.மோ. அன்பரசன், அண்ணன் க.சுந்தர் களத்தில் பாடுபட்ட முன்னாள் அமைச்சர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், சட்டமன்ற,

நாடாளுமன்ற முன்னாள், இன்னாள் உறுப்பினர்கள், ஒன்றியநகரபேரூர்க் கழக நிர்வாகிகள், கிளைகழக நிர்வாகிகள் இளைஞரணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் உடன்பிறப்புகள், தோழமைக் கட்சியினர், இளந்தலைமுறை திராவிட இயக்கத்தினர், தன்னார்வலர் கள் பொதுவாக நான் வெற்றிபெற வாழ்த்திய பொதுமக்கள், பத்திரிக்கை, ஊடக நண்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இதயப்பூர்வமான நன்றி.

இவ்வாறு இ. பரந்தாமன் தெரிவித்துள்ளார்.

டெல்லி போராட்டத்தில்

கைது செய்த அனைவரையும் விடுவிக்க வேண்டும்!

ஐ.நா மனித உரிமை ஆணையம் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு கண்டனம்!

புதுடெல்லி, அக். 12 -

டெல்லியில் போராட்டம் நடத்த முயன்ற சிஜேபி மற்றும் அரசியல் கட்சியினர் கைது செய்யப்பட்டதற்கு ஐ.நா., கவலை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஐ.நா., வெளியிட்டுள்ள அறிக்கையில், டெல்லி போராட்டங்களுக்கு முன்பும் பின்பும் இந்தியாவில் வெகுஜன தடுப்புக்காவல்கள் பற்றி கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள், போராட்டத் தலைவர்கள், சிவில் சமூக அமைப்புகளின் உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டது கவலையளிக்கிறது என்றும், அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமையை முழுமையாக மதிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது. இந்தியாவின் மனித உரிமைகள் கடமைகள் மற்றும் ஜனநாயக மரபுகளுக்கு இணங்க, அமைதியான எதிர்ப்பாளர்களைக் கையாளும் போது, சட்ட அமலாக்க முகமைகள் கட்டுப்பாட்டை" கடைப்பிடிக்க வேண்டும் என்றும் ஐநா அறிவுறுத்தியுள்ளது. அர்த்தமுள்ள உரையாடலில் ஈடுபடுமாறு இந்திய அரசுக்கு ஐ.நா., வலியுறுத்தியுள்ளது.

தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கக்கோரி

சென்னையில் போராட்டம் நடத்திய மாணவர்கள் கைது!

த.வெ.க. அரசின் காவல்துறை அராஜகம்! கடும் தள்ளுமுள்ளு, வாக்குவாதம்!

சென்னை, அக். 12 -

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி சென்னையில் நேற்று பல்வேறு இடங்களில் மாணவர்கள், இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள், இளம்பெண்களை போலீசார் வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்றதால் கடும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. போலீசாரின் கைது நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து மாணவர்கள் தரையில் அமர்ந்தும், படுத்தும் போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

எஸ்ஐஆர் பணியில் தன்னிச்சையாக செயல்பட்டு முறைகேட்டில் ஈடுபட்ட தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக சென்னை பெசன்ட் நகர் எலியட்ஸ் கடற்கரையில் நேற்று காலை 8 மணியளவில் இளைஞர்கள், இளம் பெண்கள் என 30க்கும் மேற்பட்டோர் திரண்டனர். ராதிகா கணேஷ் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு எதிராக கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன. இதுகுறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போலீசார், அனுமதியின்றி போராட்டம் நடத்தக்கூடாது எனக்கூறி மாணவர்களையும் இளைஞர்களையும் கலைந்து செல்லுமாறு எச்சரித்தனர். ஆனால், போராட்டக்காரர்கள் கலைந்து செல்ல மறுத்து தொடர்ந்து கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

இதனால் போலீசாருக்கும் மாணவர்களுக்கும் இடையே கடும் வாக்கு வாதம் ஏற்பட்டது. அப்போது போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களை போலீசார் பிடித்து இழுத்து கைது செய்ய முயன்றனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்த மாணவர்கள் தரையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து மாணவர்கள், இளம் பெண்களை போலீசார் குண்டுக்கட்டாக தூக்கியும், தரதரவென இழுத்தும் கைது செய்து வாகனங்களில் ஏற்றினர். சிலர் போலீஸ் வாகனங்களில் ஏற மறுத்ததால் கடும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. போலீசாரின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து மாணவர்கள் தரையில்படுத்துமுழக்கங்களை எழுப்பினர். இதனால், கடற்கரை பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. கைது செய்யப்பட்ட 30க்கும் மேற்பட்டோர்திருவள்ளுவர் நகர் சமுதாய நலக்கூடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதேபோல் சென்னை அண்ணா சாலை பெரியார் சிலை அருகே அனைத்திந்திய மாணவர் பெருமன்றம், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் திரண்டனர். அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாநிலச் செயலாளர் கே.பாரதி, அனைத்திந்திய மாணவர் பெருமன்ற மாநிலத் தலைவர் கே.இப்ராஹிம் ஆகியோர் தலைமையில் போராட்டம் நடைபெற்றது. மாணவர்கள் தலைமைச் செயலகத்தை நோக்கிப் பேரணியாகச் செல்ல முயன்றனர். சேப்பாக்கம் சிவானந்தா சாலையில் தடுப்புகளை அமைத்து போலீசார் மாணவர்களைத் தடுத்து நிறுத்தினர். தடுப்புகளை மீறி முன்னேற முயன்ற மாணவர்களுக்கும் போலீசாருக்கும் இடையே கடும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. போலீசாரை கண்டித்து மாணவர்கள் சாலையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்த போலீசார் முயன்றதால் வாக்குவாதம் முற்றியது.

தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களை போலீசார் குண்டுக்கட்டாக தூக்கிச் சென்று வாகனங்களில் ஏற்றினர். இந்த தள்ளுமுள்ளுவின்போது மயிலாப்பூரைச் சேர்ந்த கவின் என்ற இளைஞருக்குத் தலையில் காயம் ஏற்பட்டது. இதையடுத்து அவர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். மாணவர்கள், இளைஞர்கள் என 100க்கும் மேற்பட்டோரை போலீசார் கைது செய்தனர்.

இதற்கிடையே பெசன்ட் நகரில் கைது செய்யப்பட்ட இளைஞர்களுக்கு ஆதரவாக திமுக எம்பிக்கள் ஆ.ராசா, தமிழச்சி தங்கபாண்டியன், முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் உள்ளிட்டோர் தரையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்க வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர். மேலும், போராட்டத்தில் ஈடுபட்டு கைது செய்யப்பட்ட இளைஞர்கள் தங்கவைக்கப்பட்டிருந்த சமுதாய நலக்கூடத்திற்குச் சென்று அவர்களைச் சந்தித்தனர். இதே கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை மின்ட் பேருந்து நிலையம் அருகே நேற்று மாலை 5 மணிக்கு அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்த அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அங்கு திரளான மாணவர்கள் போராட்டத்தில் பங்கேற்றனர்.

தமிழக வேளாண் துறைக்கு ஒன்றிய அரசு வழங்கிய ரூ.300 கோடி மானியத்தில்

வெறும் ரூ.50 கோடியை மட்டுமே பயன்படுத்திய த.வெ.க. அரசு!

சென்னை, அக். 12 -

ஒன்றிய அரசு வழங்கிய 300 கோடி ரூபாய் மானியத்தில் தமிழ்நாடு வேளாண்மைத் துறை வெறும் 50 கோடி ரூபாயை மட்டுமே செலவிட்டுள்ளது அம்பலமாகி உள்ளது.

நடப்பு நிதியாண்டில், பத்பிரதான் மந்திரி ராஷ்ட்ரிய கிருஷி விகாஸ் யோஜனா உள்ளிட்ட திட்டங்களின் கீழ் தமிழ்நாடு அரசுக்கு ஒன்றிய அரசு 300 கோடி ரூபாய் மானியம் வழங்கியது.

வேளாண் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், விவசாயிகளுக்குத் தேவையான இயந்திரங்கள், தொழில்நுட்பங்கள் மற்றும் ஒருங்கிணைந்த விவசாய முறைகளை ஊக்குவித்தல் உள்ளிட்ட வேளாண் பணிகளுக்கு இந்த நிதி பயன்படுத்தப்பட வேண்டும்.

இந்நிலையில், தற்போதைய நிலவரப்படி ஒன்றிய அரசு ஒதுக்கிய நிதியில், 50 கோடி ரூபாய் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள பெரும் பகுதி நிதி இன்னும் பயன்படுத்தப்படாமல் உள்ளது.

திட்டங்களை விரைவாகச் செயல்படுத்தாததால், உரிய நிதியைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் விவசாயிகள் முழுமையான பலன்களை அடைவதில் தொய்வு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

த.வெ.க. அரசின் இந்த மெத்தனப் போக்கால், மானியம் பெறும் ஏழை எளிய விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக சமூக ஆர்வலர்கள் குற்றம்சாட்டி உள்ளனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த வல்லம் வட்டார வள மையம் வளாகத்தில் பாரத் மித்ரன் சமூகப் பொருளாதார மேம்பாட்டு அறக்கட்டளை மற்றும் புதுச்சேரி அரவிந்த் கண் மருத்துவமனை, சின்ன நெற்குணம் ஷிவானி கல்வி அறக்கட்டளையின் ஏழை மற்றும் ஆதரவற்றோருக்கான முதியோர் இல்லம் சார்பில்நடைபெற்ற மாபெரும்இலவச கண் பரிசோதனை முகாமை முன்னாள் அமைச்சர், விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார். உடன்வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார், ஒன்றிய செயலாளர் இளம்வழுதி உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.